முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1629

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**15.03.2024**, வெள்ளிக்கிழமை

1. ஓங்கார ஞான சூட்சுமமே
ஓங்கார ஞானக் கடலே
ஓங்காரன் என்அவதார ஞானியே
உந்தனுக்கு சுப்பிரமணியர் யானும்
2. யானுமே ஞானஅறிவுரை ஆசி
விளம்பிடுவேன் சோபகிருது சேல் திங்கள் தன்னில்
(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 02 ம் நாள், 15.03.2024, வெள்ளிக்கிழமை)
ஞானவான் அரங்கன் தொண்டர்படை
ஞாலமதில் உலகமெல்லாம் நிரம்பி நிற்க
3. நிற்கவே இந்தஉலகம் ஞானலோகமாக
நிலவுலகம் சத்தியவான்கள் நிறைந்த பூமியாக
ஆற்றல்பட சத்திய யுகமாகவும் மாற்றம் அடைந்துமே
சடுதி ஞானயுக மாற்றம் அரங்கன் ஆசியோடு தொண்டர்படைகள் சூழ
4. சூழவே ஆறுமுகன்யான் மாற்றம் தருவேன்
அப்பனே இந்த பேரற்புதத்தை
ஓங்காரக்குடிலாம் ஏழாம்படைவீடு கொண்டே
உலகமெல்லாம் யான் நடத்த இருக்க
5. இருக்கவே அரங்கன் குடில்நோக்கி எல்லா திசைமக்களும்
இணைந்து வந்தால் போதும்
கருத்தாக அவரவர்க்குள்ளும் தெளிவூட்டி
கலியுகத்தில் கடமை கண்ணியம் கட்டுப்பாடு என
6. அரங்கன் வகுத்த சுத்தசைவ நெறிமுறையோடு
அன்னதான நெறி பின்பற்றி வரும்வண்ணம்
வண்ணமுடன் மனமாற்றம் தந்து
வாரிவழங்கி தருமசேவை வளர்த்து
7. பெருமைபட உலகோர் எல்லாம் தருமவான்கள் என
புகலுவேன் பேராற்றல் நிரம்ப இனிதே
இனிதே உலகமாற்றம் என்அருளால் கனிவேலவன் என்ஆசியோடு
கருணை பெற்ற மக்கள் மூலமாக இனிதே

8. இனிதே அற்புதத்தை நடத்துவேன்
எங்கும் இந்த மாற்றம் நிகழநிகழ
வருகின்ற காலம் ஞானசித்தர் காலமாக
வடிவேலன் யான் ஆளுகின்ற ஞானபூமியாக மாற்றம் கொள்வது உறுதியப்பா
ஞானஅறிவுரை ஆசி முற்றே

–சுபம்–